**தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்த இரத்மலானை பல்கலைக்கழக் கல்லூரி - 2015**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்த இரத்மலானை பல்கலைக்கழக் கல்லூரியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் 2008 இன் 31 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 47(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-----------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கல்லூரியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 ஸ்தாபித்தல்

2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கத் தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 5(உ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 20 ஆம் பிரிவினது (1) ஆம் உப பிரிவின் கீழ் 2014 ஒக்தோபர் 1 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் பொருட்டு தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையால் தயாரிக்கப்பட்ட 2014 இன் 1 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டவாக்கத்தின் கீழ் அதன் இணைந்த நிறுவகமாக இரத்மலானை பல்கலைக்கழகக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமைகள் 5, 6 மற்றும் 7 ஆம் மட்டத்திலும் அதற்குச் சமமான மட்டத்திலுமான தொழில்நுட்பக் கற்கை நெறிகளைச் செயற்படுத்துவது பிரதான நோக்கமாக இருந்தன.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இரத்மலானை பல்கலைக்கழக கல்லூரியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பிரிவு | ஒரு மாதகால முன்னறிவித்தலின்றி தனது பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யும் போது ஒரு மாத சம்பளம் செலுத்தி அவ்வாறு செய்யமுடியுமாக இருந்த போதிலும், மேற்கூறப்பட்ட பிரிவிற்கு முரணாக விரிவுரையாளர்கள் இராஜினாமாச் செய்யும் போது 03 மாத சம்பளம் அறவிடப்பட்டிருந்தது. அந்த சம்பள அறவிடலின் போது ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களுக்கான ஊழியர் பங்களிப்பையும் உள்ளடக்கி கணிப்பிடப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டில் இராஜினாமாச் செய்த மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 25,538 தொகை மேலதிகமாக அறவிடப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 261(i) | சகல செலுத்துகைகளும் காசேட்டிலும் அதற்காகவுள்ள ஏனைய கணக்கேடுகளிலும் உரிய பிரகாரம் பதியப்பட வேண்டியிருந்ததுடன் காசேட்டில் தொடர் இலக்கம் இட்டு உரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களிலும் அந்த இலக்கம் இடப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கல்லூரியினால் மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 311,511,641 கிரயமான நிலையான சொத்துக்கள் தொடர்பாக கணக்காய்வின் போது போதியளவான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.5 ஆம் பிரிவு | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு நிலையான சொத்துக்களும் களஞ்சியப் பொருட்களும் சான்றுறுதி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தினால் பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | சகல அரசாங்க நிறுவனங்களிலும் கைவிரல் அடையாள இயந்திரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் உத்தியோகத்தர்கள் அலுவலகத்திற்கு வருகைதரல் மற்றும் வெளிச் செல்லுதலை உறுதிப்படுத்தும் அறிக்கை வைத்திருக்க வேண்டிய போதும், பல்கலைக்கழக கல்லூரியினால் கைவிரல் அடையாள இயந்திரத்தைப் பயன்படுத்துவதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2014 ஒக்தோபர் 01 ஆந் திகதிய தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக சட்டவாக்கத்தின் 15(1) ஆம் பந்தி | மாணவ, மாணவியரால் செலுத்தப்படுகின்ற சகல கட்டணங்கள், வருமானங்கள் மற்றும் ஏதாவது மூலங்களிலிருந்து உழைக்கப்படுகின்ற ஏனைய பணம் ''பல்கலைக்கழக கல்லூரி நிதியம்'' என்ற |

நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழக கல்லூரியால் சேகரித்த வருமானங்களில் ரூபா 2,529,150 தொகையான வருமானம் திறன்சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் மேலதிக செயலாளர் என்ற பெயரிலுள்ள கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 1,151,297 பற்றாக்குறையாக இருந்த போதிலும், ஊழியர் கிரயத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 14,753,436 இனை கழிப்பதற்கு முன் நிறுவகத்தின் பங்களிப்பு ரூபா 13,602,139 தொகையான மிகையை ஏற்படுத்தியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 இன் 01 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழக சட்டவாக்கத்தின் பிரகாரம் தேசிய தொழில் தகைமைகள் 5, 6 மற்றும் 7 ஆம் மட்டங்களின் பாடநெறிகள் மற்றும் அதனோடு அதற்குச் சமமான மட்டங்களில் வேறு தொழில்நுட்பப் பாடநெறிகளை நடாத்துதல் கல்லூரியின் நோக்கங்களாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டு வருடமொன்று கடந்திருந்த போதிலும், இந்த நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய வகையில் பாடநெறிகள் விருத்திசெய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட 09 பாடநெறிகளுக்காக பேணப்பட்ட ஆய்வுகூட வசதிகள் போதியளவில் இல்லாமை மற்றும் கற்கை உபகரணங்கள் போதியளவில் இல்லாமை என்பவற்றின் அடிப்படையில் தேசிய தொழில் தகைமை (NVQ) இற்காக பதிவுகள் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) கல்லூரியினால் நடாத்தப்படுகின்ற பாடநெறிகள் பயிற்சிப் பாடநெறிகளாக தரப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்குத் தேவையான தரக்கட்டுப்பாட்டு முறைமையை கல்லூரியில் ஏற்படுத்துவதற்கு தேவையான ஆய்வுகூட வசதிகள், கற்கை உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூட வசதிகளை விருத்தி செய்வதற்காக தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) அதன் பிரகாரம் எதிர்பார்த்தபடி சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரம் மற்றும் நிலையில் உயர் பாடநெறிகளை மாணவர்களுக்கு வழங்குவதற்கு இது வரையிலும் கல்லூரிக்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்ட அழகுசாதன தொழில்நுட்ப (Cosmetology Technology) பாடநெறி ஆரம்பிக்கப்படாதிருந்தது. ஆகையால் அந்தப் பாடநெறிக்கும் தற்போது நடாத்தப்படுகின்ற 03 பாடநெறிக்காகவும் தேவையான வசதிகள் தயாரிக்கப்படாமையின் காரணமாக அதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 47,054,869 தொகையான ஆய்வுகூட உபகரணங்கள் பயிற்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டில் கல்லூரியில் 8 பாடநெறிகளுக்காக சேர்க்கப்பட்ட 133 மாணவர்களில் 46 பேர் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர். ஒவ்வொரு பாடநெறியையும் தனித்தனியாக கவனத்தில் கொள்ளும் போது பாடநெறிகளை விட்டுச் செல்லும் சதவீதம் 18 சதவீதம் முதல் 52 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. எவ்வாறாயினும் இந்த விகிதத்தைக் குறைப்பதற்கு அதற்குப் பொருத்தமான விடயங்களை இனங்கண்டு தீர்வு காண்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஈ) ஒரு மாணவருக்கான கிரயம்**

மீளாய்வாண்டின் போது கல்வி நடவடிக்கைகளுக்காக 101 மாணவர்களுக்காக ஏற்பட்ட மீண்டெழும் செலவினம் ரூபா 21,816,835 ஆனமையால் ஆண்டில் ஒரு மாணவருக்கான கிரயம் ரூபா 216,008 ஆக இருந்தது. கல்லூரியில் சேர்க்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 270 ஆகக் காணப்பட்ட போதும் அவ்வாறு சேர்த்துக் கொள்ளாதிருந்தமை ஒரு மாணவருக்கான கிரயம் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் கல்லூரியின் சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பு சேவைகள் தனியார் நிறுவனத்தால் நிறைவேற்றப்பட்டு மீளாய்வாண்டில் அதற்காக முறையே ரூபா 715,665 மற்றும் ரூபா 1,689,625 தொகைகள் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழக கல்லூரியினால் நடாத்தப்படுகின்ற பாடநெறிகளுக்கான வருமான செலவினங்களின் மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமையின் காரணமாக ஒவ்வொரு பாடநெறியினதும் நிதிசார் செயல்முன்னேற்றத்தை பரீட்சிக்க முடியாதிருந்தது.

(இ) கல்லூரி நடாத்திச் செல்லப்படுகின்ற 03 றூட்ஸ் 3.9 பேர்ச்ஸ் அளவிலாக காணியை கல்லூரியின் பெயரில் கையேற்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பல்கலைக்கழக கல்லூரி தற்போது நடாத்துகின்ற பாடநெறிகளில் பாடங்களுக்குரித்தல்லாத ரூபா 1,447,326 பெறுமதியான 591 புத்தகங்கள் பயன்பாடின்றி கல்லூரியின் நூலகத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்லூரியின் சில புதிய விரிவுரையாளர்கள் ஆண்டில் விலகியமையால் வெற்றிடமான பதவிகளுக்காக மீண்டும் ஆட்சேர்த்தலிலுள்ள தாமதத்தின் காரணமாக இரண்டு பாடநெறிகளின் கல்வி நடவடிக்கைகளை முழுமையாக வெளிவாரி விரிவுரையாளர்களின் மூலம் நிறைவேற்றுவதற்கு ஆண்டின் போது ரூபா 585,875 தொகையினைச் செலவிடவேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஆ) 22 வெளிவாரி விரிவுரையாளர்களின் ஆளணிக் கோவைகளைப் பரீட்சித்த போது 21 பேர்களுக்காக கல்லூரியில் சேவையாற்றுவதற்குரியதாக வழங்கப்பட்ட நியமனக் கடிதம் அக்கோவைகளில் காணப்படாதிருந்ததுடன் 16 விரிவுரையாளர்களின் விண்ணப்பப்படிவம் அல்லது கல்வி மற்றும் தொழில் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் கோவைகளில் காணப்படவில்லை. எவ்வாறாயினும் நியமனக் கடிதம் இன்றி ஆண்டின் போது வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு ரூபா 1,467,125 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழக கல்லூரி 09 பாடநெறிகளை ஆரம்பித்து நடாத்தியிருந்ததுடன் நாளொன்றிற்கு 07 மணித்தியால கற்கைக் காலப் பகுதிகளில் ஒரே விரிவுரையாளரினால் அப்பாடநெறிகளுக்குரிய சகல பாடங்களும் தொடர்ச்சியாக கற்பிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் ஒரே விரிவுரையாளரினால் 07 மணித்தியாலங்களும் விரிவுரை நடாத்துதல் கல்வி முறைமைக்கு இணங்காதிருந்தமையும் அதன் மூலம் மாணவர்களின் கற்கும் செயற்பாடுகளுக்காகவுள்ள ஆர்வம் குறைவடைவதற்கு காரணமாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-------------------------------------------------------

## 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

-------------------------------------------

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் நீண்டகால தொலைநோக்குடன் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவேண்டிய போதிலும் பல்கலைக்கழக கல்லூரியினால் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

------------------------------------

2015 பெப்ரவரி முதல் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்த இரத்மலானை பல்கலைக்கழக கல்லூரிக்காக பிரத்தியேக உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று உருவாக்கப்படாதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வு பணிகளின் பொறுப்பு தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல்கலைக்கழக கல்லூரிக்காக தனிப்பட்ட உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் நோக்கங்களில் செயற்திறனான செயலாற்றலை ஏற்படுத்துவதற்காக உள்ளகக் கணக்காய்வு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்குரியதாக போதியளவான பதவியணியினர் காணப்படாமையினால் போதியளவான காலம் கல்லூரியில் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்த முடியாமையின் காரணமாக ஒட்டுமொத்த செயற்பாட்டு முறைமை தொடர்பான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் ஒரு கணக்காய்வு ஐயவினா மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(இ) அவ்வாறே பல்கலைக்கழகக் கல்லூரியின் நிதி மற்றும் செயற்பாட்டுப் பிரிவுகளுக்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையும் அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன் கணக்கீட்டு செயற்பாடுகளும் நலிவான நிலையில் காணப்பட்டது.

### 5.3 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவைத் ஸ்தாபித்து மீளாய்வாண்டில் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.4 கொள்வனவுத் திட்டம்

2006 இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகக் கல்லூரியினால் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருக்கும் போது மீளாய்வாண்டில் ரூபா 1,748,555 செலவில் பொருட் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கல்லூரியின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | கணக்குப் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை நாளதுவரையாக்குவதற்கான நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) | நிதி முகாமைத்துவம் | கொள்வனவுத் திட்டம் மற்றும் மதிப்பீடுகளின் பிரகாரம் செலவிடப்படாமை |
| (இ) | சொத்துக்களின் முகாமைத்துவம் | சொத்துக்கள் கணக்கு வைத்தல் மற்றும் பதிவேடுகளைப் பேணாமை |

| | | |
|---|---|---|
| (ஈ) | பதவியணியினர் நிர்வாகம் | பதவியணியினர்களின் ஆட்சேர்த்தல் முறையான பிரகாரம் மேற்கொள்ளப்படாமை மற்றும் கோவைகள் நாளதுவரையாகப் பேணப்படாமை. |
| (உ) | பாடநெறிகளை நடாத்துதல் | மதிப்பீடு தயாரிக்கப்படாமை, விரிவுரைக் கிரயத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |